# தெற்கில் நள்ளிரவு முதல் பத்திரிகைத் தணிக்கை


விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 5 இதழ் 230
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22 - 09 - 1995


## அரசு திடீர் அறிவிப்பு

(கொழும்பு)
யுத்தமுனைச் செய்திகள் மற்றும் இராணுவ அறிக்கைகள் குறித்து அவசரகால சட்டத்தின் கீழ் செய்தித் தணிக்கை நேற்று நள்ளிரவு முதல் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் தொடர்பு சாதன அமைச்சருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இராணுவ அறிக்கைகளையோ அல்லது யுத்தமுனைச் செய்திகளையோ வெளியிடுவதற்கு முன் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியை

(6ம் பக்கம் பார்க்க)

## அதிகளவு இழப்பே தணிக்கைக்கு காரணம்

(கொழும்பு)
அரச படைகளுக்கு ஏற்பட்டு வரும் அதிக உயிர்ச் சேதங்களையும் இராணுவ தளபாட இழப்புகளையும் மறைக்கவே அரசு வசரமாக பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

பி.பி.ஸி மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதி சந்திரிகா

(5ம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் கடலில் கடற் கரும்புலிகள் வீரகாவியம்

# ‘டோரா’ பீரங்கிப்படகு மூழ்கடிப்பு

# ‘லங்காமுடித’வுக்கு பாரிய சேதம்

## இராணுவ அதிகாரியும் பல படையினரும் பலி

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகளின் கடற்கரும் புலிகள் அணி நேற்று முன்தினம் மாலை காங்கேசன்துறை கடற்பிராந்தியத்தில் மேற்கொண்ட உக்கிரத் தாக்குதலில் ஒரு ‘டோரா’ அதிவேக பீரங்கிப்படகு முற்றாகத் தகர்க்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதுடன் இராணுவ விநியோக கப்பலான ‘லங்கா முடித’ பெரும் சேதத்திற்குள்ளானது.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்குள் பிரவேசித்த கடற்புலிகளின் படகுகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து இருதரப்பிலும் பலத்த மோதல் வெடித்தது. துப்பாக்கி வேட்டுக்களும், பீரங்கித்தாக்குதல்களும் சரமாரியாக தீர்க்கப்பட்டன.

சுமார் 4 மணித்தியாலங்களாக இடம்பெற்ற இம்மோதலினால் இப்பகுதி முழுவதும் சத்தங்களினால் அதிர்ந்த வண்

(6ம் பக்கம் பார்க்க)

## ‘லங்கா முடித’ மாதகல் கடலில் கடற் புலிகளால் தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
கடற்படையினரின் விநியோகக் கப்பலான ‘லங்கா முடித’ மீது நேற்று முன்தினம் மாலை மாதகல் கடற்பகுதியில் வைத்து கடற்கரும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலால் பலத்த சேதமடைந்ததுடன் நேற்றும் எரிந்து கொண்டிருந்தது.

கடற் படையினருக்கு தேவையான பொருட்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கிய ‘லங்கா முடித’ காரைநகர் கடற்படைத் தளத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கையில் இக்கப்பல்மீது

(6ம் பக்கம் பார்க்க)

## பல டோராப் படகுகளை புலிகள் துறைமுகத்திற்கு துரத்தியடித்தனர்

(கொழும்பு)
காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்கரும்புலிகளுடனான மோதலில் பெருமளவு படையினர் உயிரிழந்ததை அதிகாரபூர்வமற்ற இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இதுபற்றி பி.பி.ஸி.மேலும் கூறுகையில்: அரசுதரப்பு, புலிகளுக்கு ஏற்பட்டதாக கூறும் சேதத்தைவிட படையினருக்கு பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது.

புலிகள் டோராப்படகுகளை துறைமுகப்பகுதிக்கு துரத்தி

(6ம் பக்கம் பார்க்க)

## கடற் கரும்புலிகள் நால்வர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
‘லங்கா முடித’ கப்பல் மற்றும் அதிவேக ‘டோரா’ பீரங்கிப் படகுகள் மீது நேற்றுமுன்தினம் மாலை நடாத்தப்பட்ட தாக்குதலில் 4 கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இத்தாக்குதலில் முல்லை மாவட்ட கடற்புலிகளின் அர

(6ம் பக்கம் பார்க்க)

## ஒலிகன் பீரங்கியால் புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்கரும் புலிகள் கடற்படையினருக்கு எதிராக மேற்கொண்ட துணிரத் தாக்குதலில் இருபது எம்.எம் ஒலிகன் பீரங்கிகளை கடற்புலிகள் பயன்படுத்தி தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு 7வது நாளாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி லெப்.கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவு ஏழாவது நாளாக குடாநாடு பூராவும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. கோட்டை தியாக நடை பெற்று வரும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில்

(5ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கி ஆட்லறி ஷெல் வீச்சு 14 பேர் படுகாயம்

(வடமராட்சி)
பலாலி, வலலாய் பகுதியிலிருந்து வடமராட்சி நோக்கி நேற்று முன்தினமிரவு மேற்கொள்ளப்பட்ட

(2ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் கடும் விமான, ஷெல் தாக்குதல் சிறுவன் உட்பட மூவர் பலி; 30 பேர் படுகாயம்

(வடமராட்சி-நெல்லியடி நிருபர்கள்)
வடமராட்சிப் பகுதியில் கடந்த இரு நாட்களாக தொடர்ந்து படையினர் மேற்கொண்டு வரும் விமான - ஷெல் தாக்குதலினால் மூவர்பலியானதுடன் 30 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்;

வடமராட்சிப் பகுதியில் சக்கோட்டை, திக்கம் ஆகிய பகுதிமீது நேற்று வியாழன் மாலை 6.45 மணியளவில் சுமார் 45 நிமிடநேரம் இரு புக்காராக்கள் நடாத்திய ரொக்கட் தாக்குதலில் 9 வயதுச் சிறுவன் பலியானார். இவரது சகோதரர் நால்வர் உட்பட 14 பேர் படுகாயமடைந்தனர், பல வீடுகள் தரைமட்டமாகின; ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இரு புக்காராக்களிலிருந்து ஏவப்பட்ட ரொக்கட்டுகளால்

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### பிரம்புப் பின்னல்

பிரம்பிலான சகல பின்னல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். ராஜன் பின்னலகம், 286, அருச்சுனா வீதி ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (எ-5381)

### SPOKEN ENGLISH ஆங்கிலக் கல்வி நிலையம்

விரைவாகவும், சுலபமாகவும் ஆங்கிலம் பேசப் பயிலு! ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன், இல 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சி- 1675

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப்போத்தல், சகலவிதமானரோச்லைற், விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5244)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்ரூஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T.V அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல் T.V செட் றேடியோ மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ.வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (எ-5319)


## புக்காரா நோட்டம்

(அரியாலை)

நேற்று முன்தினம் இரவு 7.25 மணியளவில் பலாலியிலிருந்து புக்காரா விமானமொன்று யாழ் குடாநாட்டு கரையோரங்களுக்கு மேலாக சுற்றியபின்பு மண்டைதீவு பக்கம் சென்றது.

மீண்டும் 7.50 மணியளவில் குடாநாட்டு வான் பரப்பில் சுற்றி நோட்டமிட்டது.

59-சி


### கண்டெடுக்கப் பட்டது

இராசையா பாக்கியம் ஏழாலை வடக்கு என்பவருடைய பங்கீட்டு அட்டையும் இடம் பெயர்ந்தோருக்கான புதிய உணவுமுத்திரையும் சி.சரவணபவன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.


# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக யாழ். மாவட்ட ரீதியில் இன்று 22ம் திகதி நடைபெறும் உண்ணாவிரதங்கள் பற்றிய விபரங்கள்

வலிகாமம்- யாழ் மாவட்டம்: சிகையலங்கரிப்பாளர் சங்கம், பொம்மைவெளி மக்கள். வலிகாமம் [சண்டிலிப்பாய்] தெ. ப. பொ. கூ. சங்கம் மானிப்பாய், ஆனைகோட்டை மக்கள்.

தீவகக் கோட்டம்: [நல்லூர்] சென்ஜோன்ஸ் அக்கடமி பாடசாலை.

தென்மராட்சி [கைதடி] யாழ். மறவன் புலோ சகல கலாவல்லி வித்தியாசாலை, சிவகவி ச. ச. நிலையம், மறவன் புலோ பசுபதி ச. ச. நிலையம், மறவன் புலோ நாவற்குழி ச. ச. நிலையம்.

[சாவகச்சேரி] நுணாவில் மக்கள் வகுப்புத் தொழிலாளர் சங்கம், ப. தெ. வ. அ. கூ. சங்கம்.

[கொடிகாமம்] செல்வா ஜெனு, நவா, நேசன், உமை நேசன், மதியொளி ச. ச. நிலையங்கள் வரணி.

[பளை] இயக்கச்சி சிற்றூர் மக்கள் தபாலகம் பிரதேச சபை.

வடமராட்சி [உடுப்பிட்டி] விவேகானந்தா, விபுலானந்தா, வள்ளுவர், அறிவாலயம் ச. ச. நிலைய உறுப்பினர்கள், மக்கள், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வீரகத்தி விநாயகர் பாடசாலை.

(கரவெட்டி) துன்னாலை சிற்றூர் மக்கள்.

தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு கடற்புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்களின் வட்ட ரீதியாக நாகர் கோவிலில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றைய தினம் மாமுனை மக்கள் கலந்து கொள்வர்.

(5ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-09-22

வெள்ளி இரவு

8-02 தியாகி லெப். கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி-இயல்வாணன் எழுதிய "நீ எரித்த தீ நின்றெரிந்திடும்"
8 25 களப் பொழுது போராளி அருகரேன் எழுதிய "லெப்ரினன்ட் றேகா"
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய "சரயேவோவும் யாழ்ப்பாணமும்"
8-50 ஏர்முனை நிகழ்ச்சியில் மண்ணைப் பாதுகாப்போம்" குறுநாடகம்

1995-09-23

சனி காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7 30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-09-22

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதுயலை
5-15 தியாக தீபம்
5-30 மண்ணின் குரல்
5-40 நேயர் கடிதங்கள்
5-45 நாடகம்
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 வெற்றிச்சுவடுகள்
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என் தெரிவு

## மண்ணெண்ணை திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தில் பரலில் இருந்த முப்பதுலீற்றர் மண்ணெண்ணை கடந்த 16ம் திகதி சனிக்கிழமை இரவு இனம்தெரியாத நபர்களால் சங்க கட்டிட ஓடுபிரித்துத் திருடிச்செல்லப்பட்டுள்ளது.

இத்திருட்டுப்பற்றிச் சங்கத்தினர் தமிழீழக்காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். 154-சி

## இராசி பலன்

22-09-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி- 5]

திரயோதசி முப. இ 11. 22 வரை, மரணயோகம் பி ப 3. 38 வரை, இராகு காலம் காலை 10. 32 முதல் 12. 02 வரை, சுபவேளை காலை 6. 02 முதல் 7. 32 வரை.

மேஷம்: வேலைப்பளு, உறவினர் மனஸ்தாபம், காரிய தடை.

இடபம்: தொழில் தடை, முயற்சி தாமதம், அலைச்சல்.

மிதுனம்: அதிகாரிகள் நன்மை, பணவரவு, பொதுப் பணி.

கடகம்: சிறு பிணிகள், சுபவிரயம், கடின வாக்கு.

சிங்கம்: பெண்கள் உதவி, வாக்குவன்மை, பணியாளர் அறிவுரை.

கன்னி: அமைதிக் குறைவு, குடும்ப சங்கடம், மன வேதனை.

துலாம்: தொழில் சிறப்பு, அதிக முதலீடு, நண்பர் கலகலப்பு.

விருச்சிகம்: அறிஞர் சந்திப்பு, தெய்வ தரிசனம், பயணம்.

தனுசு: தொழில் மந்தம், எதிர்பாராத துன்பம், ஆவேசம்.

மகரம்: உறவில் விரிசல், அடிமை நிலை, ஏமாற்றப்படல்.

கும்பம்: புத்திரர் பெருமை, கலந்துரையாடல், நற்செய்தி.

மீனம்: சுயயோசிதபோக்கு பகைவர் நட்பு, சுப நிகழ்வு.

— ஜோஸ்யர்

## வடமராட்சியில்

(1ம் பக்க தொடர்ச்சி)

அல்வாய் மேற்கு மாருன்புலத்தில் வீட்டிலிருந்து கச்சான் உடைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த கதிர்காமநாதன் லோகேஸ்வரன் (வயது 09) என்னும் சிறுவனே பலியானார். இவரது சகோதரர்களான கதிர்காமநாதன் இலங்கேஸ்வரன் (வயது 15) கதிர்காமநாதன் ஈஸ்வரன் (வயது 8), கதிர்காமநாதன் ஞானேஸ்வரன் (வயது 4), கதிர்காமநாதன் ஜானகி (வயது 2) ஆகியோருடன் இதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் யசோதரன் (வயது 12), திருத்துவராசா திவாகரன் (வயது 14), வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது 48), அல்வாய் மேற்கில் வல்லிபுரம் வேலாயுதம் (வயது 63), சக்கோட்டைப் பகுதியில் கிருஷ்ணன் கிருஷ்ணதாஸ் (வயது 32), சபாரத்தினம் செல்லம்மா (வயது 65), அந்தோனி எடிஸ்டன் (வயது43) இவரது மகள் எடிஸ்டன் பிரமிளா (வயது 17), சி. கந்தசாமி (வயது 47), ஆசிர்வாதம் திரேசம்மா (வயது50) ஆகியோர் ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் பலவீடுகள் தரைமட்டமாகின. இங்கிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து மந்திகை மருத்துவமனை வளவிலும் வரணி மற்றும் சாவகச்சேரிப் பகுதியிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

### நேற்று முன்தின தாக்குதல்

வடமராட்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு புக்காரா விமானம்மேற்கொண்ட கொடூர தாக்குதலினால் இருவர் உடல்சிதறிப் பலியானார்கள்.

வடமராட்சி கிழக்கு பகுதியூடாக வடமராட்சிக்குள் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் நுழைந்த புக்காரா விமானம் மக்கள் குடியிருப்புகளை இலக்கு வைத்து அதிக உயரத்தில் பறந்தவாறு தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதலை நடாத்தியது.

உடுப்பிட்டி சந்தை வீதிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டினால் அந்த இடத்தைச் சேர்ந்த செல்லையா இராசையா (வயது85) உடுப்பிட்டி நாவலடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டினால் அவ்விடத்தைச் சேர்ந்த திருமதி இளையகுட்டி தங்கராசி (வயது 55) ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

மாலை 6.30 மணியிலிருந்து இரவு 9.30 மணிவரை தொண்டமானாறு, கெருடாவில், மயிலியந்தனை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை இலந்தைக்காடு, இமையாணன் போன்ற பகுதிகளில் இந்தக் குண்டுவீச்சை புக்காரா நடாத்தியுள்ளது.

இத் தாக்குதலினால் வீடுகள் பல தகர்ந்ததுடன் பல வீடுகள் சேதமடைந்துமுள்ளன. பல இடங்களில் கால்நடைகளும் உயிரிழந்துள்ளன.

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவத்தினர் கடந்த இரண்டாம் திகதி மேற்கொண்ட ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

உடுவில் கிழக்கை சேர்ந்த திருமதி ராணி சிவராஜா (வயது 40) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார் 170 சி

## வடமராட்சி நோக்கி

(1ம் பக்க தொடர்ச்சி)

அகோர ஆட்லறி ஷெல் தாக்குதலினால் 14 பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

தொண்டைமானாறு, வளலாய் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் ஆரம்பித்த பரவலான சூட்டுச் சத்தங்களைத் தொடர்ந்தே வடமராட்சி நோக்கி இந்த அகோர ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் புக்காரா விமானம் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கையிலேயே சுமார் 6-30 மணி முதல் 9-30 மணி வரை ஆட்லறி ஷெல் தாக்குதலும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி நடாத்தப்பட்டது.

இச் ஷெல் தாக்குதலினால் உடுப்பிட்டி நாவலடியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாலன் கிருஷ்ணபிள்ளை [வயது 59] இவரது பிள்ளைகளான கி. கிருஷ்ணபிரபு (வயது 18), கி. கிருஷ்ண தர்மினி [வயது 12] மற்றும் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த செல்வி முருகேசு கோணேஸ்வரி 28 வயது]. திருமதி யோகராசா ஈஸ்வரி [வயது 30] மகேஸ் சிறிபாஸ்கரன் [வயது 28] உடுப்பிட்டி இலந்தைக் காட்டை சேர்ந்த கந்தையா சிவக்கொழுந்து [வயது 46], பொன்னன் சக்திவேல் [வயது 28] திருமதி தவராசாவளம் [வயது 45] திருமதி தெய்வேந்திரம் ஜெயராணி [வயது 30] தம்பு துரைச்சாமி [வயது 55] மற்றும் உடுப்பிட்டி சந்தை வீதியை சேர்ந்த கந்தசாமி மோகனதாஸ் [வயது 40] கோபாலபிள்ளை நிமால் குமார் [வயது 30] இமையாணனைச் சேர்ந்த சுந்தரலிங்கம் உதயகுமார் [வயது 31] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த அனைவரும் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த பலரின் வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன. 160-51-சி

இரவு நேரத்தில் இடம்பெற்ற இத்தாக்குதலிலிருந்து தப்ப மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு இருப்பிடங்களை விட்டு ஓடியதால் பலர் ஆங்காங்கே விபத்துகளுக்குள்ளாகி காயமடைந்துள்ளனர் 160 51


## பதவி வெற்றிடம் (ஆண்கள்)

தமிழீழ சுகாதார சேவைகளின் வெளிக்கள உத்தியோகத்தர்களாக வலிகாமம் வடக்கு, சாவகச்சேரி, பளை பகுதிகளில் கடமையாற்றுவதற்குப் பொருத்தமானவர்கள் உடன்தேவை. க. பொ. த. உயர்தரத்தில் இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தியும், 30 வயதிற்குட்பட்டோரும், சொந்தக்கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பத்துடனும், கல்விச் சான்றிதழ்களுடனும் நேர்காணலுக்கு 23-09-95ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு 6/2. இளங்கோ வீதி (மணிக்கூட்டு கோபுர வீதி)யாழ்ப்பாணம் முகவரிக்கு சமூகந் தரவும்.

பொறுப்பாளர்.
தமிழீழ சுகாதார சேவைகள்.
தமிழீழம்.

(எ-5322)

## அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் தேசிய பயிலுநர் சபையின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயில விரும்புவோர் தாம் வதியும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுத் தலைவர் / செயலாளர் சிபார்சுடன் விண்ணப்பங்களை 01-10-95க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். 04-10-95இல் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்களுடன் மு. ப 9.00 மணிக்கு கிளைத் தலைமையகத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(தகைமைகள் பற்றிய விபரங்களுக்கு கிளைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்)

கௌரவ செயலாளர்.
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
21-09-1995. (எ 5324)

**மணிவாக்கு**

வலிமையோடு இருங்கள், மூடக் கொள்கைகளை உதறித் தள்ளுங்கள்.

— சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## பிழைத்த போர் மூலோபாயம்

விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரியதாக்குதலைத் தொடுக்க தேவையான பெருமளவு இராணுவ தளபாடங்களும் விமானங்களும் ஆயுதங்களும் இன்னமும் கொழும்பு வந்து சேரவில்லையென படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. யாழ். குடாவில் பெருமளவு படையினர் கிழக்கிலிருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்டபோதும் மேற்படி ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் கொழும்புவந்து சேராதபடியால்படையினர் பெருநெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

குடாநாட்டில் மழைக்காலம் தொடங்கப் போகிறது. அக்காலப் பகுதியில்படையெடுப்புக்கள் நடாத்தப்பட்டால் அவை அரச படைகளுக்கு பாரிய இழப்புக்களை உண்டாக்கும் என்றெல்லாம் தள அறிவு பட்டறிவு பெற்ற உயர்படை அதிகாரிகளால் வழங்கப்பட்ட எச்சரிக்கைகளை உதாசீனப்படுத்தி அவர்களையும் ஓரம்கட்டி தனக்கு ஆமாம் போடும் அதிகாரிகளை பதவி உயர்த்தி குடாநாடு மீதானபாரியதாக்குதலுக்கு அனுருத்தரத்வத்தை திட்டமிட்டார். அவரின் திட்டத்துக்கு ஏற்ப பலாலியில் படைகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டன கிழக்கு மாகாணத்தில் உள்ள பல படை முகாம்களை மூடி அங்குள்ள துருப்புக்கள் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர் போன்றவை கைக்குவராத நிலையிலும், அவை வந்து சேருவதற்கு முன்னர் பருவகாலம் வடக்கில் உருவாகிவிடும் என்பதையெல்லாம் கணிக்கப்படாதயுத்த மூலோபாயத்தை அனுருத்த தவும அவரது இராணுவ அதிகாரிகளும் உருவாக்கினர், இப்போது பிழையான திட்டங்களை வகுத்துவிட்டு ஆயுதங்கள், தளபாடங்கள், விமானங்கள் ஆகியவை வந்து சேரவில்லை என்று கூறிப்படையினர் அங்கலாய்க்கிறார்கள். காலம் கடந்த ஞானம். ரத்வத்தையின் அகங்காரமும் தமிழர்களை ஒழித்துக்கட்டவேண்டுமென்ற கெட்ட நோக்கமுமே இவ்வித பொறுப்பற்ற, மிக அவசரமான, யதார்த்தத்துக்குப்புறம்பான திட்டங்கள் வகுப்பதற்குக் காரணமாக இருந்தன.

இப்போது பலாலியில் குவிக்கப்பட்டுள்ள 45,000 படையினரில் பத்தாயிரம் படையினர் குறைக்கப்பட்டுள்ளனராம். 35,000 படையினர்தான் பலாலியில் தற்போது உள்ளனராம் இப்படைக் குறைப்புக்கு கூறப்படும் காரணம் நீர்கொழும்புக் கடற்பகுதியில் அன்ரனேவ் விமானம் கடலில் வீழ்ந்தமையாகும். இராணுவத்தினர் வந்த அன்ரனேவ் விமானம் கடலில் வீழ்ந்தமை, விடுதலைப் புலிகளுக்கு எதிராக திட்டமிடப்பட்டிருந்த பாரிய தாக்குதல் நடவடிக்கையில் பெரும் தளர்வும் பின்னடைவும் ஏற்பட்டதாலேயே பலாலியிலிருந்த படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாம். சிறிலங்கா அரசு திட்டமிடுவது போல் அல்லாது, விடுதலைப் புலிகளின் தலைவர் இன்னும் நூறு மடங்கு வெற்றியைத் தரக்கூடிய திட்டங்களைத் தீட்டுவதிலும், அதை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதிலும் கைதேர்ந்தவர் என்பதைக் கருத்தில் கொள்ளாமல்தான் சிறிலங்கா அரசின் தலைமைகள் எப்போதும் தோல்வியைத் தழுவுகின்றன.

இந்தநேரத்தில் விடுதலைப் புலிகள் பற்றி பி.பி.ஸி.யின் ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளதை கருத்தில் எடுப்பது நலலது. விடுதலைப் புலிகள் நடாத்தும் போரில் அவர்களின் ஆயுதபலம் எதுவெனில் அவர்களது தீவிர உணர்ச்சியும், தியாக மரணம் என்ற வழிபாட்டு மரபும் சேர்ந்து மிகப்பெரும் படைக்கலனாக மாறியுள்ளது என்று பி. பி. ஸி, கூறியுள்ளது. அதுவுமல்லாமல் நவீன ஆயுதங்களும் அவர்களிடம் உண்டு என்று பி. பி. ஸி. கூறுகிறது. யாழ்ப்பாணத்தில் மற்ற வாழ்க்கைக்கூறுகள் போலவே போரும், தியாகமும் தமிழ்ச் சமுதாயத்தின் அளப்பெரும் போர் மதியையும் கண்டுபிடிப்புக்களையும் வெளிக்கொணர்ந்துள்ளன என்று பி. பி. ஸி. மேலும் கூறுகிறது.

விடுதலைப் புலிகளின் போரும் பண்பாடும் உலகம் மெச்சக்கூடிய நிலையில் இருக்கையில், கொழும்பில் சந்திரிகா தனது அமைச்சர்களைக்கூட கட்டிஅவிழ்க்கமுடியாத நிலையில் உள்ளார். அமைச்சரவை இரகசியங்களை அமைச்சர்கள் பத்திரிகைகளுக்கு வெளியிடுகிறார்களாம். தனது ஆட்சியின் ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்ட குறைகளையும், பொலிஸாரின் அடக்குமுறைகள் பற்றியும் அமைச்சரவையில் சந்திரிகா எழுப்பிய விவாதங்கள் அம்பலமாகி, அது அரசை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கு ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறதென்று சந்திரிகா தனது அமைச்சர்களை எச்சரித்துள்ளார்.

பொருண்மியத் தடைகள் உடையட்டும்

உற்பத்திகள் இங்கே பெருகட்டும்

# யுத்த விமானங்கள் எதற்கும் காப்புறுதிசெய்யப்படுவதில்லை

(கொழும்பு)

போர் விமானங்களோ அல்லது போர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து விமானங்களோ காப்புறுதி செய்யப்படுவதில்லை என விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அன்ரனேவ் விமானத்தில் சென்று உயிரிழந்தவர்களுக்கு காப்புறுதி வழங்கப்படுமா என கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; அன்ரனேவை மீட்கவும் அதனுள் சென்றவர்களின் சடலங்களை மீட்கவும் சகலமுயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கைக் கடற்படையில் 100 மீற்றர் ஆழத்துக்கு அப்பால் ஆழ்கடலில் சுழியோடக்கூடிய சக்தி இல்லாததாலேயே வெளிநாட்டு உதவி கோரப்பட்டுள்ளது.

இவ்வேளை நாடாளுமன்றின் மீது புலிகள் குண்டுத் தாக்குதலை நடாத்தமாட்டார்கள் எனக்கூறமுடியாது. தாக்குதல்கள் நடாத்துவதற்கான சாத்தியங்கள் உண்டு. இதனாலேயே உள்ளூர் விமானசேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். -சி

# புலிகளை தடைசெய்யும் நோக்கம் இலங்கை அரசுக்கு இல்லையாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் திட்டம் எதுவும் இல்லையென இலங்கை அரசு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் அமைப்புகளைத் தடைசெய்ய இலங்கை அரசு முயற்சி செய்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அந்தந்த நாடுகளின் சட்டத்திற்கு ஏற்ப செயற்படுவதாலும், இலங்கையில்கூட அது தடை செய்யப்படாமையாலும், வெளிநாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யமுடியாதுஎனக் கூறிவிட்டன.

இந்தநிலையில் வெளிநாடுகளும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யத் தயக்கம் காட்டுவதால் இலங்கையில் விடுதலை புலிகளை தடைசெய்ய நினைப்பதன் மூலம் எதிர்பார்க்கும் பயன் கிடைக்காமல் போகும் எனவும், விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லையெனவும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். -கே-சி

## வட்டி வீதம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி இம்மாதம் 01ம் திகதியிலிருந்து தனது நிலையான வைப்புகளுக்கான வட்டி வீதத்தை வருடத்திற்கு 15 வீதமாக அதிகரித்துள்ளது.

# 25 தாக்குதல் கலங்களை படையினர் இழந்தனர்

(கொழும்பு)

மூன்றும் ஈழப்போர் ஆரம்பித்த பின் சிறிலங்கா ஆயுதப் படையினர் 25 தாக்குதல் கலங்களை இழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

2 அவ்ரோ விமானம், ஒரு புக்காரா விமானம், 2 ஹெலிகொப்டர்கள் மற்றும் அண்மையில் அன்ரனேவ் 32 ரக விமானம் ஆகியவற்றை விமானப்படை இழந்துள்ளது.

2 பீரங்கி கப்பல், ஒருகட்டளைக்கப்பல், 4 டோரூப் படகுகள், ஒரு தரையிறக்கு கப்பல், ஒரு ரோந்து படகு ஆகிய கலங்களை இலங்கைக் கடற்படை இழந்துள்ளது.

ஒரு ரி-55ரக டாங்கி, 4 பவள் கவசவாகனம், 3 சலாடின்கவசவாகனம் மற்றும் 2 ஆட்டிலறி பீரங்கிகள், 2 லாண்ட்ரோவர், டிரக்குகள் போன்ற கலங்களை இராணுவம் இழந்துள்ளது.

குறுகிய கால இடைவெளியில் இவ்வளவு கலங்களை இலங்கை முப்படையினரும் இழந்திருப்பது இதுவே முதற்தடவையாகும் என கொழும்பு செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். கே-சி

## இன்று

(மானிப்பாய்)

போரும் செயல் திட்டப் பொறுப்பாளர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கொன்று பருத்தித்துறை போரும் மகாநாட்டு மண்டபத்தில் இன்று 22ம் திகதி வெள்ளி காலை 9 மணிக்கு நடைபெறும். 71

0 0

(கொழும்புத்துறை)

யாழ். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார். தீர்த்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கும் நடைபெறும். 154

0 0

(நெல்லியடி)

பருத்தித்துறை வட இந்து கல்லூரி ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று 22ம் திகதி வெள்ளிக் கிழமை பி.பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 160

0 0

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி தாபகர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப 2 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் வீ. கணேசராசா தலைமையில் நடைபெறும்.

விழாவின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் திரு.க கந்தசாமியும் கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ.இளங்குமரனும் கலந்து கொள்வார்கள். மீ

# டிப்ளோமா பரீட்சை 4 தினங்கள் நடைபெறும்

(குருநகர்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா எழுத்துப் பரீட்சை பகுதி I, II - 1995 நாளை 23, 24, 30-ம் திகதிகளிலும் அடுத்தமாதம் 1-ம் திகதியும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை சிரேஷ்ட போதனாசிரியரிடம் இருந்து சேகரிக்கும் வண்ணம் தேர்வுநாடிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொது எழுதுவினைஞர் சேவையின் 2-ம் வகுப்பு 'அ' பிரிவு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை இம்மாதம் 30-ம் திகதி நடைபெறமாட்டாது. இப்பரீட்சை 1995-10-07ம் திகதி நடைபெறும்.

இலங்கைதிட்டமிடல் சேவையின் 2-ம் வகுப்பு - 2ம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 30-ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். -95-இ

## நாமோ புஷ்பங்கள் தூவி...

விண்ணிலே தோழரோடு
மண்ணிலே காற்றோடு
மனங்களிலோ இடம்பிடித்து
ஆலயத்தில் அமைதியாக
உறங்கும் தியாகியவன்
உடலை யுருக்கியுருக்கியே
அனலை மூட்டிவிட்டு
எட்டாண்டில்.
எழுந்து நிற்கிறான்
அலைகள் ஆர்ப்பரித்து
அவன் புகழ் பாட
வானமோ உடுக்கடித்து
போற்றி நிற்கிறது
எல்லையில் நின்றே
சின்னப் பூக்களைத் தொடுத்து
மறவர் வணங்கிட
நாமோ புஷ்பங்கள் தூவி
அவன் புகழ் இசைத்தோம்

– மீசாலையூர் கமலா

# முன்னர் நடந்த பேச்சுக்கள் போல் இனி புலிகளுடன் பேசமாட்டோம்!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(மெல்போர்ன்)

"நாங்கள் எவருடனும் பேசுவதற்கு மறுக்கவில்லை; ஆனால் பேசுவதாயின் சில நிபந்தனைகளுடன், குறிப்பிட்ட விதிமுறைகளுடனேயே பேசுவோம். அப்படி விடுதலைப் புலிகளுடன் பேசுவதாயின், அது முன்னர் நடந்த பேச்சுக்கள் போல அமையாது" என்று அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சர் ஜி எல். பீரிஸ் அண்மையில் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்தபோது, அங்குள்ள இலங்கையர்களுடன் உரையாடினார்

விடுதலைப் புலிகளுடன் பேசும் எண்ணம் உண்டா? என்று அவர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் சர்வதேச மத்தியஸ்தம் செய்யும் நிலையில் நாங்கள் தற்போது இல்லை. அப்படி நடக்குமாயின், பேச்சுவார்த்தை நடந்து ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்த பின்னர், சர்வதேச மத்தியஸ்தம் ஓர் ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கும், நற்கருத்துக்கும் நாடப்படலாம்.

நீண்ட காலமாக எதிர் உணர்வுகளும், கசப்புணர்வுகளும் நிலவி வந்துள்ளன இவைகளை இனம் கண்டு பரிகாரம் காணவேண்டும் இவைகளுக்குத் தீர்வு காணப்படவில்லையாயின், வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைத்தரம் உயர்வு, வெளியார் முதலீடு போன்ற பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. ஆகவே சகலரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்வு காணப்படவேண்டும்

இலங்கையின் தற்போதைய உண்மை நிலையையும், தள நிலையையும் யாரும் அறியவேண்டும் நாட்டின் வடபகுதியில் புலிகள் தனியான ஒரு நிர்வாகத்தை நடத்துகின்றார்கள். அவர்கள் நீதிமன்றங்கள் அமைத்துத் தீர்ப்புக்களை வழங்குகின்றனர். அவர்கள் கொழும்பு வருவோருக்கு விசா வழங்குகின்றனர் இப்படியாக அப்பகுதி இப்போது பிரிந்தே உள்ளது. நாம் அதனைச் சீர்செய்யமுயல்கின்றோம்

சிட்னி நகரில் பேசப்படுவது போல் இலங்கையில் நடக்கும் போர் உடனடியாக நிற்கப் போவதில்லை போரை நிறுத்த வேண்டுமாயின் சிலகடினமான தீர்மானங்களை நாம் எடுக்கவேண்டும். இந்தப் போர் கடந்த 13 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. அது தானாக முடிவுக்குவராது. அதை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமாயின் சில ஆக்கபூர்வமானதும், கடினமானதுமான செயற்பாடுகளைச் செய்யவேண்டும். நாங்கள் கொண்டுவந்துள்ள இத்தீர்வுத் திட்டம், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முதற்படியே.

போர் செய்வதாக இருந்தாலும் எங்களுக்கு வெளிநாட்டு ஆயுதங்கள் தேவை. சாதாரண சுடுபடைக்கலங்களுடன் போர் செய்யமுடியாது அவற்றைக்கூட நாங்கள் இலங்கையில் உற்பத்தி செய்வதில்லை. எமது நாட்டில் கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களினால் வெளிநாடுகள் ஆயுத உதவிகளை வழங்க மறுத்துவிட்டன. ஆனால் நாங்கள் பதவிக்கு வந்த பின்னர், அந்த நாடுகள் மனமாற்றம் அடைந்துள்ளன.

சாதாரணச் சிங்கள இளைஞர்களை ஆயுதங்கள் இல்லாமல் வடக்கு-கிழக்குக்கு அனுப்பிப் புலிகளால் அவர்கள் கொல்லப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு வெளிநாட்டு ஆயுத உதவிகள் தேவை. இதற்கு நாம் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவேண்டும். அதை நாம் செய்கின்றோம். அதனால் பல நாடுகள் சலுகை அடிப்படையில் ஆயுதங்களைத் தந்து உதவுகின்றன எனினும் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற முக்கியகுறிக்கோளாலேயே அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கே-சி-ரி)

---

யாழ்ப்பாணத்தில்

# அரச அலுவலகங்களுக்கு முத்திரை வழங்க ஏற்பாடு

(குருநகர்)

யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரச அலுவலகங்கள் தமக்குத் தேவையான தொகை முத்திரைகளை தமக்குத் தெரியப்படுத்தினால் அவைகளை உரிய திணைக்களங்களுக்கு விநியோகிக்கக் கூடியதாய் இருக்கும் என்று யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் சகல அரச திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்

தற்போதைய சூழ்நிலை காரணமாக இவ்வாறு முத்திரைகள் யாழ். கச்சேரியினரால் தொடர்ந்து விநியோகம் செய்யப்படஉள்ளதாகவும் திணைக்களங்கள் தாம் பெறும் முத்திரைகளுக்கான பெறுமதியை உடன் யாழ். செயலகத்துக்கு செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். -95

---

# இளம்பிள்ளைவாத நோயை ஒழிக்க தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இளம்பிள்ளை வாத நோயை ஒழிப்பதற்கான தடுப்பு இயக்கம் எதிர்வரும் நவம்பர் டிசம்பர் மாதங்களில் தீவிரமாக செயற்படும் என்று வடமாகாண சுகாதார பணிப்பாளர் வி சிறிகாந்தா தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு வெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பயிற்சி வகுப்புக்கள் இன்று 22 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும்.

யாழ் மாவட்டத்தில் பத்துவீதமான ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்துகள் வழங்கப்படும். சுமார் ஒரு லட்சத்து பதினையாயிரம் வக்சீன் மருந்து இதற்கென தேவைப்படுகிறது.

இம் மருந்தை குழந்தைகளுக்கு கொடுப்பதற்கென மாவட்டத்தில் 381 மத்தியநிலையங்கள் அமைக்கப்படும்.

(5ம் பக்கம் பார்க்க)

## வாய்க்கால் துப்பரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் வாய்க்கால்களை துப்பரவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.

மழைகாலம் நெருங்குவதைத்தொடர்ந்தே தூர்ந்திருக்கும் வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. 162-சி

---

# சேர்பியநிலைகள் மீது ஐ.நா.படையினர் விமானத் தாக்குதல் நிறுத்தம்

(சரஜேவோ)

பொஸ்னிய தலைநகர் சரஜேவோவை சுற்றி சேர்பியர்கள் வைத்திருந்த கனரக ஆயுதங்களை விலக்கியதனை அடுத்து நேட்டோ விமானத் தாக்குதல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக ஐ. நா அறிவித்துள்ளது.

சேர்பியர்கள் தங்கள் கனரக ஆயுதங்களை 72 மணி நேரத்தில் விலக்க வேண்டுமென காலக்கெடு விதிக்கப்பட்டது. காலக்கெடு முடியும் முன்னரே சேர்பிய படைகள் 250 கனரக ஆயுதங்களை விலக்கிக் கொண்டன இதனால் சரஜேவோவில் அமைதி நிலவுகிறது.

எனினும் மீண்டும் சேர்பிய படைகள் சரஜேவோ நகரை தாக்க முற்பட்டால், சேர்பியர் மீது நேட்டோ விமானத் தாக்குதல் தொடருமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போது சரஜேவோ நகருக்கு ஐ. நா. படை உணவு, மற்றும் மருந்து வகைகளை விமான மூலம் கொண்டுவரத் தொடங்கி விட்டன

இதேவேளை சரஜேவோவிலும் ஏனைய பொஸ்னிய நகரங்களிலும் யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என பொஸ்னிய சேர்பியர்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். கே-சி

---

# இடம்பெயர்ந்தோர்நிவாரண நிறுவை அளவையில்குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள ஒரு பல நோக்குகூட்டுறவுச் சங்கத்தின் கிளையில் வழங்கப்பட்ட இடம் பெயர்ந்தோர் நிவாரணத்தில் பொருட்களின் நிறை குறைவாக இருந்ததை யாழ். செயலக நிறுவை அளவைகள் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

இச் சங்க கிளைக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட செயலக நிறுவை அளவைகள் பரிசோதகர் கே. ஜே. ரூபேந்திரன் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தில் பொருள்களின் நிறை குறைவாக இருந்ததை கையும் மெய்யுமாக பிடித்துள்ளார்.

சங்க கிளையில் வழங்கப்பட்ட 10 கிலோ அரிசியில் 450 கிராம் எடை குறைவாகவும், 1 கிலோ 650 கிராம் பருப்பில் 100 கிராம் எடை குறைவாகவும் காணப்பட்

(5ம் பக்கம் பார்க்க)

---

# ஆற்றில் பஸ் வீழ்ந்தது 50 பேர் மரணம்

(புதுடில்லி)

உத்தர பிரதேச மாநிலத்தில், உத்திரகாசி மாவட்டத்தில் பகீரதி ஆற்றில் அரசு போக்கு வரத்து கழக பஸ் வீழ்ந்ததில் 50 பேர் நீரில் மூழ்கி மரணமாகினர்.

இந்த பஸ்ஸில் 60 க்கும் மேற்பட்டபயணிகள் சென்றதாகவும் இதுவரை 18 பேர் வரை காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

இந்தியாவில் அண்மைக் காலமாக பஸ், கார்கள் ஆற்றில் விழுவதால் பல பயணிகள் மரணித்து வருகிறார்கள் என்பது கவனிக்கதக்கது. கே-சி

---

# கடத்தப்பட்ட ஈரான் விமானம் நாடு திரும்பியது

(ரெல் அவிவ்)

ஈரானிலிருந்து பயணிகளுடன் கடத்தப்பட்ட விமானம் மீண்டும் ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

மூன்று நாட்களுக்கு முன் ஈரானிய விமானம் பயணி ஒருவரால் மிரட்டி கடத்தப்பட்டு இஸ்ரேலில் தரை இறக்கப்பட்டது. கடத்தல்நாட்டை சூத்திரதாரி இஸ்ரேல் படைகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து, தற்போது விமானம் ஈரானுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விமானக் கடத்தலை இஸ்ரேலே முன்னின்று நடத்தியதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. கே-சி

---

## கட்டுரைப் போட்டி

(திருநெல்வேலி)

பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

அத்துடன் பேச்சுப்போட்டியும் நடாத்தப்படவுள்ளது மேற்படி போட்டிக்கான விண்ணப்பத்தை ரூபா 20 செலுத்தி நாயன்மார்கட்டு செம்மணி வீதியிலுள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. -157

---

வெளிநாடு செல்வோர்

# குடும்பங்களை காப்புறுதி செய்ய புதிய திட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் பெற்றுக் கொடுக்கவும் அக் குடும்பங்கள் காப்புறுதி செய்வதற்குமான புதிய வேலைத்திட்ட மொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து இவ் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இதன்படி 1996 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 500 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கப்படும். தாய், தகப்பன் குழந்தைகள் உள்ளடக்கியதாக காப்புறுதித்திட்டமும் ஆரம்பிக்கப்படும்.

வெளிநாடு செல்வதற்கு முன்னர் அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தங்களை பதிவு செய்துகொள்ள வேண்டும்

இதேவேளை . வெளிநாடு செல்பவர்கள் பயிற்சி பெற்று சான்றிதழைப் பெற்ற பின்னரே வெளிநாடு செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சான்றிதழ் பெறாதவர்கள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்களாம்.

கடந்த வருடம் மட்டும் 90,000 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடிச் சென்றுள்ளார்கள். 7

---

# நிரந்தரமாய்த் தூங்கிவிடு புத்தபிரானே...

பூனையினைக் கொன்றதென்று
புத்தபிரானே-இப்ப
புது வழக்குப் போட்டிருக்கு
புத்தபிரானே!
ஆனையின்னும் கிட்டவில்லை
புத்தபிரானே-நாயை
அடைச்சிருக்காம் கொட்டடியில்
புத்தபிரானே!

நீ யெழுதித் தந்த சட்டம்
புத்தபிரானே-களனி
நீரெழுத்தா யானதய்யா
புத்தபிரானே
வாவியிலே செத்தபிணம்
புத்தபிரானே-அனுப்பி
வைப்பவருன் சீடர்களாம்
புத்தபிரானே!

பூனைகளுக்குள்ளவிதி
புத்தபிரானே -மனிதர்
பேர்களுக்கு வாய்க்கவில்லை
புத்தபிரானே!
நீயிருந்து ஆனதென்ன
புத்தபிரானே - ஐயா
நிரந்தரமாய்த் தூங்கிவிடு
புத்தபிரானே!

— மதவடிச்சித்தர்

# "தலைவர் 'பிரபா'வின் வழிநடத்தலில் தாயக மண்ணை மீட்டெடுப்போம்"

## தமிழேந்தி அறைகூவல்

(நெல்லியடி)

"தலைவர் பிரபாகரன் எவரது காலிலும் விழுந்தவரல்லர். தமிழ்மக்களின் மானத்தைக் காப்பாற்றி வைத்தவர். அவரது வழிநடத்தலில் எம் தாயக மண்ணை விரைவில் மீட்டெடுப்போம்."

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வடமராட்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழப் பாதுகாப்பு நிதிக் கூட்டத்தில் பேசிய நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி குறிப்பிட்டார்.

கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்: உலகம் முழுவதிலும் எட்டுக் கோடித் தமிழர்கள் வாழ்கின்றனர் நாங்கள் எமது மண்ணை மீட்பதற்காக இங்கு போராடுகின்றோம்.

இம் மண்ணில் 15 லட்சம் தமிழர்களும், வெளிநாடுகளில் 15லட்சம் தமிழர்களும். தமிழகத்தில் 6 கோடித் தமிழர்களும் வாழ்கின்றனர். தமிழர்கள் அங்கெல்லாம் அடிமைகளாக, அகதிகளாக வாழ்கின்றனர்; மலேசியா, சிங்கப்பூரிலுள்ள தமிழர்கள் மட்டும் ஓரேயொரு வழியில் சமானத்துடன் வாழ்கின்றனர்;

நீண்ட ஒரு வரலாற்றின் சொந்தக்காரர் தமிழர்கள். இந்தியா முழுவதும் ஒருகாலத்தில் தமிழரின் நாடாக இருந்தது;

சிறிலங்கா அரசு 1994இல் போருக்காக 2,660 கோடியும், 95ஆம் ஆண்டு 3,156 கோடியும், சித்திரைமாத நடுப்பகுதியில் 4,250 கோடியும் உலக நாடுகளிலிருந்து கடனைப் பெற்றது. இதைவிடக் கொழும்பில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கியில் கடன்வாங்கி, அதில் கிடைத்த பணத்தைப் போருக்குச் செலவழித்து அதன் மூலம் ஆயுதத்தை எமக்காக எதிரி நீட்டுகின்றான்.

தற்பொழுது தீர்வுத் திட்டத்தை உலகநாடுகளில் காண்பித்து ஆயுதம் வாங்க முயற்சிக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. தீர்வுத் திட்ட முகமூடியைக் கழற்ற சந்திரிகா விரும்பமாட்டார். இது ஒருபோதும் நாடாளுமன்றத்திலும் நிறைவேறப்போவதில்லை. அப்படி நிறைவேற்றப்பட்டால் உலகத்தை இனியும் ஏமாற்ற முடியாது.

ஜே. ஆர். ஆட்சியில் வட்டமேசை, பிரேமதாசா ஆட்சியில் தெரிவுக்குழு, டி. பி யின் ஆட்சியிலும் இதேகுழு; இதனைச் 17 ஆண்டுகள் இவர்கள் நல்ல குதிரையில் சவாரி செய்தனர் என உணர்ந்த சந்திரிகா உலகத்தை ஏமாற்ற தானும் தெரிவுக் குழுவைத் தெரிவு செய்து தனது ஆட்சியை நீடிக்கப் பார்க்கிறார்.

தமிழர்கள் கைகட்டி, வாய் பொத்தி நின்று தாம் கொடுப்பதை வாங்குவார்கள் என நினைக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா;

அன்று கைகட்டி, வாய் பொத்தி நின்று அடிவாங்கிய தமிழினம், இன்று எமது உரிமைக்காக போராடுகிறோம். 1958, 1971, 1977, 1983 ஆண்டுகளில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கான இனத்துவேச கலவரத்தினால் தான் சிவகுமாரன், தலைவர் பிரபாகரன் போன்றோர் உருவாகினார்கள். அன்றைய கொடுமையை இவர்களின் வழிநடத்தலுக்கு காரணமாய் அமைந்தது;

கடற்புலிகளின் பலத்தினால் தான் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு உணவுப் பொருளும் தளபாடமும் கொண்டுவர முடியாது அரசு திணறுகிறது. இதற்குக் காரணம் உங்களினால் எமக்குக் கொடுக்கப்பட்ட நிதியாகும்;

இந்தமண் விடுதலை பெற்ற பின்னால் நீங்கள் மற்றவர்களைத் தீண்டாமல் கோடி கோடியாய் உழையுங்கள். நீங்கள் கொடுக்கும் பணம் அந்நியருக்கல்ல. உங்கள் புதல்வர்கள் குழந்தைகளைக் காப்பாற்றத்தான் உதவுகிறது. செல்வம் இருந்து என்ன பயன்; எதிரி ஷெல் அடித்து எம்மை அழிக்க முன்வருகிறான். அதனைத் தடுக்க எமக்கு பெறுமதியான ஆயுதங்கள் வரட்டும்.

எமது போராட்டத்தில் எல்லோரும் இணைவதன்மூலம் விரைவில் விடுதலையடைவோம். இல்லையானால் பின் வாங்கமாட்டோம். தொடர்ந்து போரிடுவோம் என்றும் கூறினார்: -160 51-சி

## தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்பு செய்யும் இடங்கள்

[யாழ்ப்பாணம்]

சங்கானை, சண்டிலிப்பாய் வட்டத்தில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்பு செய்யும் மக்களின் வசதி கருதி பங்களிப்புச் செய்ய ஒப்புக்கொண்டவர்களின் நிதியினை பெற்றுக்கொள்வதற்கு அவ்வக் கிராம சேவகர்களின் பிரிவுகளில் கீழ்வரும் விபரப்படி நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கினை மேற்கொண்டுள்ளதாக நிதிப்பிரிவினர் அறிவித்துள்ளனர்;

சங்கானை வட்டம் நாளை 23 ம் திகதி பனிப்புலம் ஆறுமுக வித்தியாலயம், பனிப்புலம் மு. ப. 8 30 - 12.00 சுழிபுரம் கிழக்கு, பண்ணாகம். மெய்கண்டான் ம. வி, பண்ணாகம் - பி. ப 2. 30 - 5. 00

24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டு: வடக்கு. மேற்கு சுப்பிரமணிய வித்தி. வட்டுக்கோட்டை மு ப 8 30 12. 00, சித்தங்கேணி. வட்டு. கிழக்கு, அராலி வடக்கு வட்டு. இந்துக் கல்லூரி, சித்தங்கேணி பி. ப 2. 30 - 5. 00

சண்டிலிப்பாய் வட்டம் 25 ம் திகதி திங்கட்கிழமை சுதுமலை வடக்கு, தெற்கு தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகம், மூளாய் சந்தி மானிப்பாய் மு.ப 8,30 - 12. 00 ஆனைக்கோட்டை பி. ப 2 30 - 5 00

24-9 95 ஞாயிற்றுக்கிழமை சாவற்கட்டு, உயரப்புலம் பாலசுப்பிரமணிய வித்தி. மு. ப. 8-30 - 12-30, நவாலி வடக்கு, தெற்கு, கிழக்கு ஆனைக்கோட்டை பி. ப, 2-30 5-00.

23ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் வடக்கு, கிழக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை கையாள்வதில்கூட புலிகள் நுட்பத்துடன் செயற்படுகிறார்கள்!

[லண்டன்]

யுத்தத்தை கையாள்வதில் கூட விடுதலைப்புலிகள் மிகுந்த நுட்பத்துடன் செயற்படுகிறார்கள் என்று பி. பி. சி யின் கொழும்பு முகவர் திரு. ஜோர்ஜ் ஹாரினி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

புள்ளிவிபரக் கண்கொண்டு நோக்கினால் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமான பூசல் எப்போதோ முடிந்திருக்க வேண்டும்.

பிரிவினைப்போராட்டம் வன்முறைக்கு திரும்பிய கடந்த 12 வருடங்களில் பெரும்பாலும் சடங்குகளுக்கான இராணுவமாக இருந்த இலங்கைப்படை சுமார் ஒருலட்சம் பேரைக் கொண்டதாக மாபெரும் இராணுவமாக 10 மடங்கு பெரியதாக்கப் பட்டது,

ஆனால் அந்தளவு இராணுவத்திற்கு தேவையான கனரக ஆயுதங்கள் போதியளவு இன்றி இலகுரக ஆயுதங்களையும் காலாட்படையையுமே இலங்கை இராணுவம் பெரிதும் நம்பியிருக்கிறது என பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்

இவ் இராணுவத்திடம் போதியளவு பீரங்கிகள் இல்லை, 50 டாங்கிகள் மற்றும் இராணுவத்தினரை ஏற்றிச்செல்லும் கவசவண்டிகளும் உள்ளன.

கடற்படையும் விமானப் படையும்கூட போதுமானதாக இல்லை. இருப்பினும் கடந்த 6 மாதங்களில் நான்கு இராணுவ விமானங்களை இழந்த போதிலும் இன்னும் விமானப் படையிடம் குண்டு வீசும் 4 போர் விமானங்களும், 6 இற்கும் மேற்பட்ட பயணிகள் விமானமும் உள்ளன.

இவ்வாறு இலங்கை ஆயுதப்படைகளுடன் ஒப்பு நோக்கும்போது விடுதலைப் புலிகளிடம் அளவில் பெரிதும் குறைந்த ஆயுத தளபாடங்களே உள்ளன.

இவ்விடயத்தில் உண்மைத் தகவல்களை பெறுவது மிகவும் கடினமான ஒன்றாகும் போராளி, மேலாளர், அவருக்கும்மேலாளர் எனப்படி நிலை கொண்ட இரகசிய அமைப்பு விடுதலைப்புலிகளிடம் உண்டு.

அண்மைய ஆண்டுகளில் விடுதலைப் புலிகளின் படைப் பலம் 12 முதல் 15 ஆயிரமாக இருந்து வந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது;

மிக அண்மைய உளவுத் தகவலின் படி விடுதலைப் புலிகளின் பலம் 17 ஆயிரம் அளவிற்கு உயர்ந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இலங்கை அரசாங்கத்தின் கடற்படைக்கு நேர்ந்த மிகப்பெரிய இழப்பிற்கும் கரும் புலிகளே காரணம்.

கடந்த ஏப்பிரல் மாதம் திருமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற இரு கடற்படைக்கப்பல் தகர்க்கப்பட்டமையும் கரும் புலிகளின் தாக்குதலினாலேயாகும்.

ஆனால் தீவிர உணர்ச்சிப் பெருக்கை மட்டும் விடுதலைப் புலிகள் நம்பியிருக்கவில்லை. போராளிகள் சிறந்தமுறையில் ஆயுதம் தரித்திருக்கின்றனர். அவர்களுக்கு பல வழிகளில் ஆயுதங்கள் வருகின்றன

பல ஆயுதங்கள் இலங்கை இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்படுகின்றன. சில விடுதலைப் புலிகளினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேறுசில பன்னாட்டு ஆயுத வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன;

தானியங்கித் துப்பாக்கி போன்ற தரைப்படை ஆயுதங்கள் வெளிநாடுகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவது வழக்கமாகி வருகிறது,

1980களின் நடுப்பகுதியில் தமிழ்க்குழுக்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சியைப் பெற்று வந்தபோது விடுதலைப் புலிகள் ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளைப் பெறத் தொடங்கினர்;

அது முதல் விடுதலைப்புலிகள் பன்னாட்டு ஆயுத சந்தை ஆயுதங்களைப் பெறும் முக்கியமான ஒரு மார்க்கமாக விளங்கிற்று.

வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட தளபாடங்களில் இரவில் பார்க்கதுணை செய்யும் "பைனகுலர்ஸ்" தகவல் தொடர்புக்கருவிகள், கனரக இயந்திர துப்பாக்கிகள், ராக்கெட்டுகளால் இயக்கப்படும் குண்டுகள் என்பவை அடங்கும்.

இவற்றைவிட அதி நுட்பம் வாய்ந்த ஆயுத தளபாடங்களை விடுதலைப்புலிகள் இவ் ஆண்டு பெற்றுக்கொண்டுள்ளனர்.

தரையிலிருந்து விண்ணில் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள், ஆப்கானிஸ்தானிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'ஸ்றிங்கர்' ஏவுகணைகள், என்பனவும் இதில் அடங்கும்.

அத்துடன் விமானத்தை தாக்கும் பீரங்கிகள் ஏவுகணைகள், மிகச்சிறிய விமானங்கள் என்பனவும் இவ் அதிநுட்பம் வாய்ந்த தளபாடங்களுள் அடங்குவன ஆகும்;

இச்சிறிய ரக விமானங்கள் பிரான்சிடமிருந்து விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருக்கலாம் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது

முன்னாள் சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பா இன்னும் பல நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் விடுதலைப்புலிகளுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லையென்று இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்;

இவ்வியாபாரத்தில் மிகவும் அவசியமாக தேவைப்படுவது பணம் அதுவும் மேலை நாடுகளில் குடியிருக்கும் இலங்கை தமிழர்களிடமிருந்து பெரும் தொகைப்பணம் திரட்டப்படுகிறது

விடுதலைப்புலிகள் சிறிய அளவில் சொந்த சரக்கு கப்பல்களையும் வைத்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளிடமிருக்கும் தரையிலிருந்து விண்ணைத்தாக்கும் ஏவுகணைகளாக் குறிப்பிடத்தக்களவிற்கு இராணுவ சமபலம் இவ்வாண்டு மாறிவிட்டிருக்கிறது;

இலங்கை விமானப் படைக்கு விண்ணில் அது கொண்டிருந்த மேலாதிக்கத்துக்கு சவால் விடப்பட்டுள்ளது. ஆனாலும் இது போன்ற ஆயுதங்களை மட்டும் விடுதலைப்புலிகள் நம்பியிருக்கவில்லை.

பெருமளவு ஆயுதங்கள், துப்பாக்கிரவைகள் என்பன இலங்கை படைகளிடமிருந்தும் கைப்பற்றப்படுகின்றன.

1993 காலப்பகுதியில் முக்கிய கடற்படைக்கலன்களையும் பல பீரங்கி வாகனத்தையும் விடுதலைப்புலிகள் அரச படையினரிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

மூன்றுவாரங்களுக்கு முன் அரச படையினரின் இரு கடற்படை ரோந்து படகுகளை விடுதலைப்புலிகள் கிழக்கு சுடற்பிராந்தியத்தில் தாக்கி அழித்த போது இலங்கை படையிடம் கைப்பற்றிய ஆயுத உபகரணங்களையே விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருக்கலாம் என நம்பப்பட்டது.

சிலவருடங்களுக்கு முன் நீர் மூழ்கி கப்பல் மூலமுன் மாதிரிகளைக்கூட விடுதலைப் புலிகள் உற்பத்தி செய்துவிட்டார்கள் என்னும் தகவல்கள் வந்தன.

தமிழ் மக்களின் ஏனைய நுட்பம் வாய்ந்த திறமையைப் போல விடுதலைப்புலிகள் யுத்தத்தை கையாள்வதில் கூட மிகுந்த நுட்பம் பயன் படுத்தப்படுவது நோக்கத்தக்கது என பி. பி. சி தெரிவித்தது; க-சி

### தியாகி திலீபன்

(2ம் பக்க தொடர்ச்சி)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாணவர் அமைப்பினால் உடுப்பிட்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றைய தினம் வல்வை மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்வர்.

### இடம்பெயர்ந்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டன

இதனைத் தொடர்ந்து சங்க நிர்வாகத்திற்கு மேற்படி பொருள்களின் நிறை குறைவாக காணப்பட்ட சம்பவத்தை பரிசோதகர் கே ஜே. ரூபேந்திரன் அறிவித்துள்ளார். 170-சி

### இளம்பிள்ளைவாத

(4ம் பக்க தொடர்ச்சி)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். போலியோ தடுப்பு இயக்கத்திற்கான தடுப்பு மருந்துகளை குளிரூட்டப்பட்ட நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் கப்பல் மூலம் யாழ் மாவட்டத்திற்கு எடுத்து வரப்படும், 170-72-ரி

### தியாகி

(1ம் பக்க தொடர்ச்சி)

நேற்றைய நிகழ்வில் பெருமளவில் பெண்கள் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றி இருந்தனர். பல்வேறு தரப்பட்ட மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றைய அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் உறுப்பினர்கள் சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் பொது மக்களென பெரும் எண்ணிக்கையில் நேற்றைய உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நல்லூரில் நேற்று நடைபெற்ற அடையாள உண்ணாவிரதத்தில் பனை தென்னை வள அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஊழியர்கள் அதிகளவில் கலந்து கொண்டனர் அத்துடன் மாதர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர் இசைப் பிரசங்கங்கள் கலைநிகழ்ச்சிகளெனப் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. 170-162-சி

### அதிகளவு

(1ம் பக்க தொடர்ச்சி)

யின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த தணிக்கை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி உட்பட அனைத்து தொடர்பு சாதனங்களிற்கும் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

செய்தித்துறை சுதந்திரத்தை நிலைநாட்டி விரிவு படுத்தப் போவதாகக் கூறி பொ. ச. மு அரசு பதவிக்கு வந்தது. ஆனால் விமர்சனங்களைத் தாங்கும் நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தற்போது இல்லை.

போர்முனையில் ஏற்படும் அதிகளவு இழப்புகள் அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதால் இந்த தணிக்கை முறை அமுலுக்கு வந்துள்ளது எனவும் தெரிவித்தது.

# அன்ரனேவ் விமான சிதைவுகள் ஆழ்கடலில் கண்டுபிடிக்கப்பட்டது

## அப் பகுதி பாதுகாப்பு வலயமாகிறது

[கொழும்பு]

அன்ரனேவ் விமானத்தின் சிதைவுகள் ஆழ்கடலில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நவீன 'ஸ்கானர்' முறையைப் பயன் படுத்தி ஆழ்கடலில் தேடுதல் மேற்கொண்டதன் பயனாக வீழ்ந்து நொருங்கிய விமானம் உள்ள இடம் கண்டுபிடிக்கப் பட்டது.

'மாஸ்ரர் டைவேஸ்' கம் பனியின் தலைவர் இதுபற்றி தெரிவிக்கையில்: அன்ரனேவ் கடலில் வீழ்ந்த இடம் சரி வரக் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. ஜாஎலவிலிருந்து 20 மைலுக்கு அப்பாலுள்ள கடற் பிரதேசத்தில் இந்த விமானம் வீழ்ந்து நொருங்கியது.

கடலில் இந்த விமானத்தின் சிதைவுகள் ஒருமைல் ஆழத்தில் உள்ளது. இந்த சிதைவுகளை மீட்பதற்கான உபகரணங்கள் விரைவில் தரு விக்கப்பட்டு மீட்புவேலை உட னடியாக ஆரம்பிக்கப்படும் என்றார்.

இது சம்பந்தமான சகல தகவல்களும் பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவிக்கப்பட் டுள்ளது. விமானம் வீழ்ந்து நொருங்கிய கடற்பகுதி பாது காப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. சி

# சுதந்திரசதுக்க 'பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியில் நீர்க்கால்வாயிலிரு ந்து இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்றை பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

சுமார் 40 வயது மதிக்கத் தக்க இந்த ஆணின் சடலத் தில் வெளிக்காயங்கள் ஏதும் காணப்படவில்லை இச்சட லத்தை அடையாளம் காண்ப தற்காக கொழும்பு பெரியாஸ் பத்திரியின் பிரேதச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக கறு வாக்காட்டு பொலிசார் தெரி வித்துள்ளனர். வி சி

# அச்சுவேலியில் வீழ்ந்த ஷெல்லால் யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து அச்சு வேலி நோக்கி நேற்று அதி காலை அகோர ஷெல் தாக்கு தல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இரு யுவதி கள் காயமடைந்துள்ளதுடன் பல வீடுகள் சேதமடைந்துள் ளன. பலாலியிலிருந்து ஏவப் பட்ட ஷெல்கள் அச்சுவேலி தென்மூலையிலுள்ள திரேசா மகளிர் பாடசாலையில்வீழ்ந்து வெடித்ததில் இதே இடத்தை சேர்ந்த இ சிறுனி (வயது-22) என்பவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யோசப், மரியம்பிள்ளை இராஜநாயகம் ஆகியோரின் வீடுகளும் ஷெல் தாக்குதலின் போது சேதமடைந்தன.

170-ரி-சி

# கப்பல்கள் மீதான தாக்குதல்களில் கடற்படைக்கு பலத்த உயிர்ச்சேதம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறை முக பகுதியிலும், மாதகல் கடற்பரப்பிலும் கடற்புலிக ளின் மூன்று படையணிகள் ஒன்றிணைந்து நடாத்திய வெற்றிகர தாக்குதல்களில் கடற்படையினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது

கடற்கரும்புலிகள் படை யணி, சாள்ஸ் கடல்தாக்குதல் படையணி, நளாயினி கடல் தாக்குதல் படையணி. ஆகி யன இணைந்தே இந்த வெற்றி கர தாக்குதலை நடாத்தி னர்.

கடற்கரும்புலிகள் லங்கா முடித கப்பல் மீது மேற் கொண்ட தாக்குதலில் அக் கப்பலில் இருந்த கடற்படை யினருக்கும் மற்றொரு கரும் புலித்தாக்குதலினால் மூழ்கடிக் கப்பட்ட டோரா பீரங்கிப் படகிலிருந்த கடற்படையின ருக்கும் காங்கேசன் துறை துறைமுக பகுதியில் இடம் பெற்ற கடும் சமரினாலும் கடற்படையினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது சி

# வடமராட்சி கிழக்கில் விமானக் குண்டுவீச்சு

[யாழ்ப்பாணம்)

புக்காரா சுப்பசொனிக் விமானம் நேற்று முன்தினம் நண்பகல் தொடக்கம் இரண்டு தடவைகள் வடமராட்சிக் கிழக்குப் பகுதியிலுள்ள குடா ரப்பு என்னுமிடத்தில் சுமார் எட்டுக்குண்டுகளை வீசித்தள் ளின.

இக்குண்டு வீச்சால் பல வீடு கள் சேதமடைந்ததுடன் பல தென்னை பனைமரங்களும் சேத மடைந்தன

இதேவேளை கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிக் கிழக்குப் பகுதி களான உடுத்துறை ஆழிய வளை போன்ற இடங்களை நோக்கி எறிகணை தாக்குதல் கள் நடாத்தப்பட்டன.

156-ரி-சி

# 'ஐரிஸ்மோனு' கப்பலை இலக்கு வைத்து வடமராட்சியில் விமானத் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற் பரப்பிற்கு விடுதலைப்புலிகளால் கொண்டு வரப்பட்ட 'ஐரிஸ் மோனு' கப்பலை இலக்கு வைத்து படையினர்விமானத் தாக்குதலைநடாத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக தரித்து நின்ற "ஐரிஸ் மோனு' நேற்று முன்தினம் புலிகளால் அங்கிருந்து வடம ராட்சி கிழக்கு குடாரப்பு பகு திக்கு கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து இக்கப்பலைத் தகர்த்தழிக்கும் நோக்கில் சுப்பசொனிக், புக்காரா விமா னங்கள் கரையோரப்பகுதியில் பலத்த குண்டுத் தாக்குதலை நடாத்தி வருவதுடன் படை முகாம்களிலிருந்தும் வடம ராட்சி நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டுவரு கிறது

நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் இக்கப்பலை தேடும் போர் விமானங்கள் அதனை அழிக்கும் நோக்குடன் தொட ர்ச்சியாக விமானத் தாக்குதல் களை நடாத்தி வருவதாகத் தெரிய வருகிறது. 51-சி

### காரை நகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

காரைநகரில் நிலைகொண் டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு பொன்னாலை, மூளாய், திருவடி நிலை முதலான கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக் குதல்களை மேற்கொண்டனர்.

இச்ஷெல்கள் மேற்படி இடங் களின் கரையோரங்களில் விழுந்து வெடித்தன. 139-சி

### பல டோரா

(1ம் பக்க தொடர்ச்சி)

அடித்துள்ளதாகவும் இதில் ஒரு டோரா படகு பலத்த சேதமடைந்ததாகவும் அதை இராணுவ வட்டாரங்கள் ஒப் புக் கொண்டன.

புலிகளின் இவ்வாறான தாக் குதல்கள் அரசுக்கு மிகப் பெரும் தலையிடியைக் கொடுத் துள்ளதாகவும் பி. பி. ஸி தெரிவித்தது. -சி

### ஒலிகன்

(1ம் பக்க தொடர்ச்சி)

முன்னர் புலிகளால் கைப் பற்றப்பட்ட இருபது எம் எம் ஒலிகன் பீரங்கிகளை கடற்புலி களின் மோட்டார் ஜெற் அதி வேகப் படகுகளில் பொருத்தி கடற்புலிகள் கடற்படையின ருடன் பெரும் கடற்சமரில் ஈடுபட்டனர்.

கடற்கரும்புலிகளின் இத் தாக்குதலால் கடற்படையி னர் புலிகளின் படகுகளை நெருங்க முடியாதநிலை ஏற்ப ட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது. சி

### தேசியபாதுகாப்பு

(8ம் பக்க தொடர்ச்சி)

மெமோறியல் ஆங்கில பாட சாலை மு. ப. 8-30 - 12 00 மானிப்பாய் தெற்கு. மேற்கு மெமோறியல் ஆங்கிலப் பாட சாலை பி. ப. 2-30 - 5-00 வி

### கடற்கரும்புலி

(1ம் பக்க தொடர்ச்சி)

சியல் பொறுப்பாளர் * மேஜர் அன்பு [சக்கோட்டை]
* மேஜர் கீர்த்தி (புலோப்பளை)
* கப்டன் சிவா [அரியாலை]
* கப்டன் செவ்வானம் சுழி புரம் [இவர்கடந்த 16-7-95 அன்று எடிதாரா கப்பல் மீதான தாக்குதலின்போது தப்பி வந்தவர்] ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித் துள்ளனர். சி

# 4 கடற் கரும்புலிகளின் ஊர்திப் பவனியும் நினைவுக்கல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற் பரப்பில் நேற்று முன்தினம் மூண்ட பெரும் கடற்சமரின் போது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலில் டோரா பீரங்கிப் படகினைத் தகர்த்து மூழ்கடித்தும், 'லங்கா முடித' எனும் பாரிய கப்பலுக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தியும் வீரச்சாவெய் திய நான்கு கடற்கரும்புலி களின் ஊர்தி பவனியும். நினை வுக்கல் நாட்டலும் நடைபெற வுள்ளது.

மேற்படி நான்கு கடற்புலி களான, மேஜர் அன்பு (இராம சாமி ராஜ்பவான் - சக் கோட்டை பருத்தித்துறை), மேஜர் கீர்த்தி வல்லிபுரம் நகு லேஸ்வரன்-பளை), கப்டன் சிவா (கிருஷ்ணபிள்ளை மோகன தாஸ்-மண்டைதீவு), கப்டன் செவ்வானம் (கிருஷ்ணபிள்ளை சுமதி-மூளாய் தெற்கு. சுழி புரம் ஆகியோரின் திரு வுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி யாழ். மாவட்டத்தில் கடற்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்திலிருந்து நாளை காலை 10 மணிக்கு ஆரம் பித்து, வலிகாமக்கோட்டம் ஊடாகவடமராட்சிகோட்டம் சென்று வடமராட்சி கிழக்கு. தென்மராட்சி ஊடாக மீண் டும் 24ம் திகதி வலிகாமக் கோட்டத்தை வந்தடையவுள் ளது.

இதேவேளை' இக்கடற் கரும் புலிகளில் நால்வரில் மேஜர் கீர்த்தியின் நினைவுக்கல் நாளை காலை 9 மணிக்கு கொடிகாமம் துயிலும் இல்லத்திலும், அன் றைய தினம் மாலை 4 மணிக்கு மேஜர் அன்புவின் நினைவுக்கல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும், மறுநாள் 24ம் திகதி மாலை 4மணிக்கு கப்டன் செவ்வானம், கப்டன் சிவா ஆகிய இருவரினது நினைவுக் கற்களும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சகல இராணுவ அணிவகுப்பு மரி யாதைகளுடனும் நாட்டப்பட வுள்ளன. -சி

### காங்கேசன்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் இருந்தது.

விடுதலைப் புலிகளின் நீரூந்து விசைப்படகுகளும் ஏனைய படகுகளும் மூன்று அணிக ளாகச் சென்று தாக்குதலை நடாத்தின.

படையினரின் அதிவேக டோறு படகுகளும் பீரங்கிப் படகுகளும், பீரங்கிக் கப்பல் ஒன்றும் கடற்புலிகளுக்கு எதி ரான தாக்குதலை மேற்கொண் டன.

சுமார் அரை மணிநேரம் இடம்பெற்ற இத் தாக்குதலை யடுத்து கடற்புலிகளின் படகு ஒன்று டோறு பீரங்கிப்படகை தாக்கியதில் பீரங்கிப்படகு வெடித்துச் சிதறி சுக்கு நூறா கியதுடன் தீப்பிடித்து எரி யத் தொடங்கியது.

அப்படகில் இருந்த கடற் படையினர் அனைவரும் கொல் லப்பட்டனர். இரவு சுமார் பத்து மணியளவில் படகு முற் றாக நீரில் மூழ்கியது.

இதேவேளை காங்கேசன் காங்கேசன்துறைமுகப் பகுதி யில் பொருட்களை இறக்கிவிட்டு காரைநகர் நோக்கி புறப் பட்ட 'லங்கா முடித' கப்பல் மீது மாதகல் கடற்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கரும்புலித் தாக் குதலில் இக்கப்பல் பாரிய சேதத்திற்குள்ளானது.

மாலை 5 மணிக்கு ஆரம்ப மான இத்தாக்குதல் இரவு 10 மணிவரை நீடித்தது

விடுதலைப் புலிகளின் தாக் குதலுக்கு ஈடுகொடுக்க முடி யாத அரச படையினரின் படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் தப்பிச் சென்றன. கவி

### தெற்கில்

(1ம் பக்க தொடர்ச்சி)

பெறுவது அவசியமாகும்.

இத்தணிக்கைச் சட்ட அமு லின் படி; வெளிநாட்டு மற் றும் உள்நாட்டு தொடர்பு சாதனங்களுக்கு வழங்கப்படும் இராணுவ அறிக்கைகள் அனைத்தும் கடுமையான தணிக்கையை எதிர்நோக்க வேண்டி வரும்.

தணிக்கை செய்யப்பட வேண்டிய பட்டியலில் இரா ணுவ அறிக்கைகள், புகைப் படங்கள், ஒலிப்பதிவு நாடா மற்றும் ஒலி ஒளிப்பதிவு நாடாக்கள் அடங்கும்.

தகுதிவாய்ந்த அதிகாரியாக தொடர்புசாதன சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலர் எட்மண்ட் ஜெயசிங்க நியமிக்கப்படுவார் இவ் அறிவித்தல் நேற்று நள்ளி ரவே வர்த்தக மானியில் வெளியிடப்பட இருந்தது

வடக்கு கிழக்கு யுத்த நில மை குறித்து சில பத்திரிகைக ளும் வெகுஜன தொடர்பு நிறுவனங்களும் பொறுப்பற்ற விதத்தில் செய்திகளை வெளி யிட்டதன் காரணமாக அமைச் சரவை இந்த அவசர முடிவை மேற்கொண்டது.

மக்கள் மத்தியில் பீதி நிலையை உருவாக்கும் விதத் தில் சில பத்திரிகைகளும் வெகுஜன தொடர்பு நிறுவ னங்களும் செய்திகளை வெளி யிட்டுள்ளன. இவ்வாறு செய்தித் தணிக்கையை கொண்டு வருவதன் மூலம் பத்திரிகை சுதந்திரத்தை தடைசெய்யும் எண்ணம் அர சாங்கத்திற்கு கிடையாது இது ஒரு தற்காலிக ஏற்பாடே

தேசிய நலனை முன்னிட்டு மேற்கண்ட நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டது என்றும் தெரிவித்தார். ச-சி

### லங்கா முடித

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரும் புலிகள் திடீர் தாக் குதலை மாலை 5-40 மணியள வில் மேற்கொண்டனர்.

மூன்று அதிவேக டோரா பீரங்கிப்படகும் ஒரு டோரா பீரங்கிப் படகும் 'லங்கா முடித' விற்கு காவலாக சென்று கொண்டிருக்கையில் இத்தாக்குதலை கடற் கரும் புலிகள் மேற்கொண்டனர். இதனால் கப்பல் பாரிய சேதத் திற்குள்ளானதுடன் ஒரு பகுதி கடலினுள் மூழ்கியது.

இக்கப்பல் நேற்று முழுவ தும் புகை கக்கிய வண்ணம் எரிந்து கொண்டிருந்தது. இக் கப்பலில் இருந்து வரும் புகையை குடாநாட்டின் பல பகுதியிலுமுள்ள பெருமளவு மக்கள் பார்த்தனர்.

'லங்கா முடித' விலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5-30 மணி முதல் மாலை 5-30 மணிவரை காங்கேசன்துறை யில் பொருட்கள் இறக்கப் பட்டன. சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under, Licence number B/1683618.